DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC.241/2022

Prosecution witness – PW 7

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சிவசண்முகநாதன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)

23.02.2026 at 01.00 P.M.

முதல் விசாரணை

1. நான் தற்போது திருப்பாலைக்குடி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 17.06.2022ம் தேதி இரவு 21.00 மணியளவில் நிலையப்பொறுப்பில் இருந்த போது தாலியரேந்தல் குரூப் வி.ஏ.ஓ கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று சிக்கல் காவல் நிலையக் குற்ற எண்.77/2022 பிரிவுகள் 374 இ.த.ச மற்றும் Bonded Labour System (Abolition) Act பிரிவு 16, 17, 18 ன் மற்றும் Child Adolescent Labour P& R Act 1986, Section 3(1) and 14, 14(a), மற்றும் JJ, C & P children Act 2015 Section 79 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். வாதியின் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கை அசலையும் கனம் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3ஆகும். பிற நகல்களை உயரதிகாரிகளின் பார்வைக்கு வைத்தேன். இது தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார் மனுவில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி மற்றும் நேரம் 17.06.2022ந் தேதி மதியம் 03.00 மணியளவில். இவ்வழக்கின் புகார் மனுவை காவல் நிலையத்திலிருந்து பெற்றக்கொண்டது அன்றே இரவு 10.00 மணி என்றால் சரிதான். சம்பவ இடமும், காவல்நிலையமும் சுமார் 1/2 கி.மீ துாரம் இருக்கும் என்றால் 6 கி.மீ துாரம் இருக்கும். முதல் தகவல் அறிக்கையை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தது சம்பவம் நடந்த அன்று இரவு 10.30 மணிக்கு வைத்தேன். என்னை இவ்வழக்கின் விசாரணை அதிகாரி விசாரணை செய்தது எந்த தேதியில் என்றால் மறுநாள் 18.06.2022ந் தேதி விசாரணை செய்தார். இவ்வழக்கின் அசல் முதல்

தகவல்அறிக்கையை 3 நாட்கள் காலதாமதாக அனுப்பியுள்ளேன் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. இவ்வழக்கின் புகார்தாரர் கிராம நிர்வாக அலுவலர் என்றால் சரிதான். அவர் கொடுத்த பொய்யான புகாரை வைத்து முறையாக விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி